

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கன்னிச்சேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், வட்டார சுகாதார அலகு, அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடம் என மொத்தம் ரூ.5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (17.07.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம், விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ஜெயசிங், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு. யசோதாமணி அவர்கள் ஆகியோர் உள்ளனர்.



மாமல்லபுரம் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்கினார். அருகில் நகர பொறுப்பாளர் வெ.விசுவநாதன், நகர பொறுப்புக் குழு உறுப்பினர் எஸ்.எம்.கே.ஏழுமலை மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 148 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜூலை 18-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 148வது நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் உணவு வழங்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 148 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (17.7.2025) வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95, கிழக்கு மாட வீதி வில்லிவாக்கம். 2) வட்டம் 95 அ ஆதி நாயுடு தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீன தயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு, , எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், கே.எஸ்.பாபு, எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### செஞ்சி ஒன்றியம் – ஆலம்பூண்டியில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் - செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

செஞ்சி, ஜூலை 18-

செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டியில் "உங்களுடன் ஸ்டாலின் "திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் முதற்கட்டமாக 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை நகர்ப்புற பகுதிகளில் 21 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 81 முகாம்கள் உட்பட 102 முகாம்கள் நடைபெற உள்ளது. நகர்புற பகுதிகளில் 13 அரசு துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளை சேர்ந்த 46 சேவைகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்சிதம்பரத்தில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் தொடங்கப்பட்டது.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட ஊராட்சி செயலாளர் பூ.நடராஜன் அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு உத்தரவினை அவர் வழங்கினார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்அனைத்து துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது முகாமிற்கு வருகை தந்த வயதான மகளிர் இடம் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் இருப்பதால் அவருக்கு தொடர்ந்து மருந்து மாத்திரை வழங்குவதற்கு மருத்துவரிடம் அறிவுறுத்தினார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் உங்கள் வீடுகளுக்கே தேடி சென்று மருந்து மாத்திரை கொடுக்க உத்தரவிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர் கேமல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபாசங்கர், ஊராட்சிமன்ற தலைவர் முத்தம்மாள் சேகர் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

செஞ்சி வட்டாட்சியர் துரைச்செல்வன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி

# இன்று தமிழ்நாடு நாள் விழா! : சென்னையில் நடைபெறுகிறது!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 18-

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.10.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு இன்று (18.07.2025 வெள்ளிக்கிழமை), சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப்படவுள்ளது.

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என முதலமைச்சர் அவர்களால் 31.10.2021ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி இவ்வாண்டு தமிழ்நாடு நாள் விழா 18.07.2025 அன்று சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், முன்னிலையுரையும் ஆற்றுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து மரு.ஜெ. இராஜமூர்த்தி தலைமையில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. "பேரறிஞர் அண்ணாவும் தமிழும்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் த. இராமலிங்கம் "இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி "இமய நெற்றியில் எழுதுக தமிழ்நாடு" என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா "தமிழ்நாடு என்றால் தனியின்பம் தானே" என்ற தலைப்பில் திருமதி ரேகா மணி கருத்துரையாற்றுகின்றனர்.

திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அமைச்சர் மு.பெ சாமிநாதன் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் மா. அப்ரின் என்ற மாணவிக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருப்பத்தூர் மாவட்டம் கி.க. ஜெயஶ்ரீ என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம் இ. மேகதர்ஷினி என்ற மாணவிக்கு ரூ.20,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் பெ. ஜீவகனி என்ற மாணவனுக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம் இர. முத்து மீனாட்சி என்ற மாணவிக்கு ரூ.30,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற திருநெல்வேலி மாவட்டம் ல. ஹரிஹரசுதன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கியும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றி கூறுகிறார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை (18-07-2025) மாலை 4.00 மணிக்கு ஆவடி மாநகர காவல் ஆணையர் அலுவலக எதிரில் உள்ள கோல்டன் கிறிஸ் ஹாலில் நடைபெறவுள்ளது. மாவட்ட அவைத் தலைவர் மா. இராஜி தலைமையில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ் நிவேதாஜெசிகா மாநில இளைஞரணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஶ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி.ராஜேந்திரன். ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் முன்னதாக பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத் வரவேற்புரையாற்றுகிறார்.

அது சமயம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

**பொருள்: ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை"**

ஜூலை 20 அன்று தமிழ்நாடு துணை முதல்வர் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை குறித்து

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்**
செயலாளர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக



தமிழ்நாடு முதல்வர் அவர்களின் கிராம சாலைகள் விரிவாக்க திட்டத்தின் கீழ் கொடுமாம்பள்ளி ஊராட்சியில் 2.260 கி.மீ தூரம் ரூ.57.18 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலையினை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஒன்றிய கழக பொறுப்பாளர்.எம்.ராஜேந்திரன், சேர்மன். விஜயாஅருணாசலம், துணை சேர்மன்.டி.ஆர். ஞானசேகரன், கே.எஸ்.தேவேந்திரன்,பி.ஆர்.சின்னபையன்,சரவணன், ஒன்றிய பொறியாளர். செல்வி, BLA2, BLC, BDA கிளை கழக உறுப்பினர்கள், கழகதோழர்கள், பெண்கள் என கலந்து கொண்டு நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றி தந்த சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவித்தனர்.



வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 சைதாப்பேட்டையில் நடந்த "உங்களுடன் ஸ்டாலின் "திட்ட முகாமில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர் பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று கொண்டனர். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் , 4வது மண்டல குழு தலைவர் வெங்கடேசன், மாநகராட்சி ஆணையர் லட்சுமணன், மாமன்ற உறுப்பினர்கள் ரேகா அன்புநிதி, கா.சு. சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.